ஓம் சரவணஜோதியே நமோ நம

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1478

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**16.10.2023**, திங்கட்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளின் பலம்கொண்ட தேசிகனே
வானவர்கள் மெச்சுகின்ற தர்மனே
வள்ளலாக வாழுகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 29ம் நாள், 16.10.2023, திங்கட்கிழமை)
அறமாக உலகை மீட்கின்ற
அற்புதத்தை வரமாகப்பெற்று வந்த தேசிகனே
3. வையகத்தில் உன் தர்மம் அற்புதம் நடத்தும்
வளர்ந்து வந்து அரங்கன் உன் தொண்டர்கள்
களங்க மற கலியுகத்தின்
பேராற்றல் பட இயங்கி
4. வையகத்தைக் காக்கும் மகா சக்தியாக
வரலாறு படைக்கின்ற ஞான ஆட்சிதனை
திறம்பட உலகுக்கு தந்து தேசிகன்
உன் அவதார நோக்கம் பூர்த்திகொள்ள நேரும்
5. நேர்மைகொண்டு ஓங்காரக்குடில் நோக்கி
நிலவுலகில் அன்பர்கள் படை எடுத்தால்
வறுமை விலகும் வளர்ச்சி காணும்
வையகத்தை மாற்றுகின்ற வல்லமையும் உருவாகும்
6. ஆகவே அரங்கன் தொண்டு ஆற்றல்பட ஆறுமுகன் தொண்டாகும்
வரம்கூடி உலகோர் வளர்ச்சி காணவேண்டி
வையகத்தில் ஓங்காரக்குடில் நோக்கி
வருவது அவசியம் ஆகும்

7. ஆகவே அரங்கன் சன்மார்க்கத்தை
அறிவிப்பேன் வேதமாக ஏற்று
வரமாக அரங்கன் விளக்குகின்ற
வல்லமையான தர்மஞான உபதேசங்களை

8. உபதேசங்களை எல்லாம் உண்மை நெறி
உலகை மாற்றும் உயர் நெறியாகக் கருதி
கருதியே உலகோர் பின்பற்றி வந்தால்
கலியுகத்தில் அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்பு உறுதி
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–